**In the Court of the Subordinate Judge of Attur**

**O.S.No. 174 / 2012**

**Deposition of: D.W. 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:சத்தியமூர்த்தி** | **Father Name** | **: சுபாஷ்** |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Caste** | **:** | **Religion** | **:** |
| **Calling** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed by in accordance with the provision of Act X of 1873 on Date: 09-01-2019.**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதி சின்னையன் பெயருக்கு நான் பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன். பொது அதிகாரப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 என்றால் சரி. பி.வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்துக்களை பி.வா.சா.ஆ.5ன் மூலம் நான் கிரையம் வாங்கினேன். 07.04.1999ந்தேதி நடுகவுண்டர் வாரிசுகளிடமிருந்து சொத்துக்களை பி.வா.சா.ஆ.5ன் மூலம் கிரையம் வாங்கினேன். அந்த சொத்துக்களின் சர்வே எண்.1004/3 A1. நடுகவுண்டரின் வாரிசுகளின் பவர் ஏஜன்ட் என்ற முறையில் துரைராஜ் என்பவர் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.5ன் மூலம் நான் 3.90 ஏக்கர் வாங்கினேன். சர்வே எண் 1004/3 A1 என்பது முதலில் 1004/3 என்று இருந்தது என்றால் சரி. சர்வே எண் 1004/3 என்பது நடுகவுண்டர், சின்னத்தம்பி, வெள்ளையன் ஆகியோர் மூவருக்கும் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் சரி. அதில் நான் நடுகவுண்டரின் வகையறாவிடமிருந்து மட்டும் வாங்கினேன். வெள்ளையன் என்பவரிடமிருந்து மேரிலீலாவதி என்பவர் 1988ம் ஆண்டு கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. மேரிலீலாவதி என்பவர் 1004/3ல் 1 ஏக்கர் 40 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 1004/3 A1 ல் அலமேலு என்பவர் சின்னத்தம்பி என்பவரிடமிருந்து நிலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அலமேலு என்பவர் வெள்ளையன் வகைறராவிடமிருந்தும் நிலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 1004/3 A1 ல் மொத்த விஸ்தீரனம் 9 ஏக்கர் 90 செண்ட் என்றால் சரி, அதில் நடுக்கவுண்டர், சின்னத்தம்பி, வெள்ளையன் ஆகிய மூவருக்கும் பாத்தியம் என்றால் சரி. சர்வே எண் 1004/3 A1 ல் நடுகவுண்டருக்கு பாத்தியப்பட்டது 3 ஏக்கர் 30 செண்ட் தான் அதற்கு மேல் பாத்தியிமில்லை என்றால் சரியல்ல. அவர்கள் மூவருக்கும் தலா 3 ஏக்கர் 90 செண்ட் கூட்டுப்பட்டா உள்ளது. எனக்கு விற்பனை செய்த காலக்கட்டத்தில் நடுகவுண்டரிடம் 2 ஏக்கர் 90 செண்ட் தான் இருந்தது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 நான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரி. பி.வா.சா.ஆ.6ல் எனது தகப்பனார் சுபாஷ் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். இன்னொரு நபர் குழந்தைவேலின் மகன் பெயர் தெரியவில்லை அவர் கையெழுத்து போட்டுள்ளார். கணிணியில் அச்சிட்டவர் என்ற இடத்தில் ஆறுமுகம் என்பவர் பெயர் உள்ளது. பி.வா.சா.ஆ.6 பத்திரத்தில் சொத்து விவரத்தில்

செக்குபந்தியில் 1004/3 A1 ல் அலமேலு நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதே போல் பி.வா.சா.ஆ.6 ல் முதல் தாக்கில் செக்குபந்தியில் நடுக்கவுண்டர், அலமேலு இவர்கள் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதே போல் பி.வா.சா.ஆ.6 ல் 4 வது தாக்கில் செக்குபந்தியில் 1004/3 A1 ல் அலமேலு நிலத்திற்கு கிழக்கில் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. பி.வா.சா.ஆ 6 பத்திரம் எழுதப்பட்ட அன்று 1 ம் பிரதிவாதியிடம் இருந்து நான் ரூ.12,00,000/- ரசீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ரசீதில் உள்ள கையெழுத்தோ, ரேகையோ என்னுடையது இல்லை. என்னிடம் காட்டப்படும் ரசீதில் என் தகப்பனார் சுபாஷ் என்பவரும் ஒரு குழந்தைவேல் என்பவரின் மகனும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் இல்லை. இந்த ரசீதும் ரவி காப்பியர்ஸ் ஆறுமுகம் என்பவர் கணிணியில் அச்சிட்டுள்ளார் என்றால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.6 பவர் பத்திரம் எழுதிக்கொடுத்த அன்று 1 ம் பிரதிவாதி சின்னையன் என்பவரிமிருந்து நான் ரூ.12,00,000/- பெற்றுக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ரசீது எழுதிக்கொடுத்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரசீதினை பற்றி 1 ம் பிரதிவாதி சின்னையன் அவரது எதிர்வழக்குறையில் குறிப்பிட்டுள்ளார் என்றும் அதற்கு நான் பதில் போடவில்லை என்றால் தெரியவில்லை. ரசீது இருக்கிறது என்ற விவரம் தெரிந்த காரணத்தினால் தான் அதை நான் இதுநாள் வரை மறுக்கவில்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி சின்னையனிடமிருந்து நான் ரூ.12,00,000/- பெற்றுக்கொண்டதால் பி.வா.சா.ஆ.6 பொது அதிகாரப்பத்திரத்தை ரத்து செய்யும் உரிமை எனக்கில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 நான் எழுதிக்கொடுத்த அதிகாரப்பத்திரத்தின் ரத்து பத்திரமாகும். பி.வா.சா.ஆ.9 07.09.2011 ந்தேதியிட்டது என்றால் சரி. பி.வா.சா.ஆ.9 ரத்துப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள துரைராஜ் என்பவர் என் சொந்த பெரியப்பா. இரண்டாவது சாட்சி கையெழுத்து போட்டுள்ள பால்பாண்டி என் உறவினர். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் 1 ம் பிரதிவாதி சின்னையன் பார்ட்டி இல்லை கையெழுத்தும் போடவில்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தின் அசல் ரத்துப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதற்கு குறிப்பான காரணமில்லை. சாட்சி மீண்டும் கடனுக்காக வங்கியில் ஒப்படைத்திருப்பதாக கூறுகிறார். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் ' மேற்படி பத்திரத்தை ரத்து செய்வது சம்மந்தமாக மேற்படி சின்னையனுக்கு ஏற்கனவே தகவல் அனுப்பியுள்ளேன் என்ற வாசகம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வாசகத்தை நான் எழுதவில்லை. அந்த வாசகத்தை யார் எழுதினார்கள் என்பதற்கு சுருக்கொப்பம் இல்லை. அதற்கு பத்திரத்தின் இறுதிப்பத்திரத்தில் ஷ ரா ஏதுவும் இல்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 1 ம் பிரதிவாதி சின்னையனுக்கு நான் எந்த தகவலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. சர்டிபிகேட் ஆப் போஸ்ட் மூலம் கடிதம் அனுப்பினேன். தபால் நகல் தொலைந்துவிட்டது ரசீது உள்ளது. அவ்வாறு நான் கடிதம் எதுவும் 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

**குறிப்பு**

1 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-T.Munusmay
Subordinate Judge,
Attur.